# மூன்றாம் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2023

ஒன்பதாம் வகுப்பு

பதிவு எண்:

## தமிழ்

நேரம்: 1.30 மதிப்பெண்கள்: 50

### பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 8x1=8

1. முண்டி மோதும் துணிவே இன்பம் - இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது
   அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு இ) துணிவு ஈ) மருட்சி
2. 'ஞானம்' என்பதன் பொருள் யாது?
   அ) தானம் ஆ) தெளிவு இ) சினம் ஈ) அறிவு
3. காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
   ஞாலத்தின் மாணப் பெரிது - இக்குறளின் ஈற்றுச்சீரின் வாய்பாடு யாது?
   அ) நாள் ஆ) மலர் இ) காசு ஈ) பிறப்பு
4. வண்ணதாசனுக்குச் சாகித்திய அகாதெமி பரிசு பெற்றுத் தந்த நூல்
   அ) ஒரு சிறு இசை ஆ) முன்பின் ஈ) அந்நியமற்ற நதி இ) உயரப் பறத்தல்
5. தமிழ்ப் புலவரைப் போலவே உரோமச் சிந்தனையாளர்கள் கொண்ட கொள்கை
   அ) நிலையற்ற வாழ்க்கை ஆ) பிறருக்காக வாழ்தல்
   இ) இம்மை மறுமை ஈ) ஒன்றே உலகம்
6. இமயத்துக் கோடு உயர்ந்தன்ன - இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?
   அ) கொம்பு ஆ) மலையுச்சி இ) சங்கு ஈ) மேடு
7. ஆக்குவது ஏதெனின் அறத்தை ஆக்குக
   போக்குவது ஏதெனின் வெகுளி போக்குக
   இப்பாடலடிகள் இடம் பெற்ற நூல் எது?
   அ) சிலப்பதிகாரம் ஆ) சூளாமணி இ) நீலகேசி ஈ) யசோதர காவியம்
8. இப்பாடலில் அமைந்த அடி எதுகையை எடுத்தெழுதுக.
   அ) ஆக்குவது, போக்குவது ஆ) ஆக்குவது, அறத்தை
   இ) ஆக்குவது, வெகுளி ஈ) ஆக்குவது, ஏதெனின்

### பகுதி - II

5x2=10

எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க.
(15வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)

9. பகுத்தறிவு என்றால் என்ன?
10. தாவோ தேஜிங் 'இன்னொரு பக்கம்' என்று எதைக் குறிப்பிடுகின்றது?
11. தமிழ்ச் சான்றோர்க்கும், உரோமையச் சான்றோருக்கும் உள்ள வேறுபாடு யாது?
12. பொருத்தமான வாய்பாடுகளை வட்டமிடுக.
    அ) பகலவன் - காசு / கருவிளம் / கூவிளங்கனி
    ஆ) வெற்றிடம் - நாள் / கூவிளம் / புளிமா
13. பிறமொழிச் சொற்களை தமிழாக்குக :
    மார்னிங் நாஷ்டாவுக்கு இரண்டு தோசைகள் ஹோட்டலில் சாப்பிட்டேன்.
14. சொற்றொடர் உருவாக்குக :
    அ) பசுமரத்தாணி போல ஆ) அத்தி பூத்தாற் போல
15. 'தலை' என முடியும் குறட்பாவினை எழுதுக.

### பகுதி - III

3x3=9

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.
(18வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)

16. நாம் கடைபிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளாக யசோதர காவியம் குறிப்பிடுவன யாவை?

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



17. கோர்டன் ஆல்போர்ட் கூறும் மூன்று இலக்கணங்களைக் குறிப்பிடுக.
18. 'சைக்கிளில் வந்த' எனத் தொடங்கும் அக்கறை கவிதையை அடிபிறழாமல் எழுதுக.
19. பிறர் நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம்நாணத் தக்க துடைத்து - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
20. உருவக அணியை விளக்குக.

## பகுதி - IV

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 5 = 15

21. கீழ்க்கண்ட பாடலில் திரண்ட கருத்தை எழுதி ஏற்புடைய நயங்களைப் பாராட்டுக.

திங்கள்முடி சூடுமலை
தென்றல்விளை யாடுமலை
தங்குபுயல் சூழுமலை
தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மைதிரு
அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை
பொதியமலை என்மலையே - குமரகுருபரர் (அல்லது)

வாழ்க்கைப் போரில் வெற்றி பெறுவதற்கான வழிகளைக் கழுகு மரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?

22. நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக. (அல்லது)
வார இதழ் ஒன்றில் படித்த கவிதையை / கதையைப் பாராட்டி அந்த இதழாசிரியருக்கு அஞ்சலட்டையில் கடிதம் எழுதுக.

23. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக :



24. மொழிபெயர்க்க :

A deer, a turtle, a crow and a rat were friends. One day the deer was caught in a hunter's trap. Friends made a plan to save him. According to the plan, the deer lay motionless as if it were dead. The turtle crossed the hunter's path to distract him. The hunter left the deer, and went after the turtle. Meanwhile, the rat chew open the net to free the deer. The crow picked up the turtle and quickly took it away from the hunter. From this story, we learn that the teamwork can achieve great results.

## பகுதி - V

விடை தருக : 1 x 8 = 8

25. மொழியிலும் இலக்கியத்திலும் பெரியார் மேற்கொண்ட சீரமைப்புகளை விளக்குக.

(அல்லது)

தாய்மைக்கு வறட்சி இல்லை என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.

******

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

# மூன்றாம் இடைப்பருவப் பொதுத்தேர்வு - 2023

ஏழாம் வகுப்பு — பதிவு எண் 7 2 4 2

## தமிழ்

நேரம்: 1.30 — மதிப்பெண்கள்: 50

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5 x 1 = 5

1. மரம் வளர்த்தால் ______ பெறலாம்.
   அ) மாரி ஆ) வரி இ) கறி ஈ) பரி
2. உழவர் சேற்று வயலில் ______ நடுவர்.
   அ) செடி ஆ) பயிர் இ) மரம் ஈ) நாற்று
3. இளங்கோவடிகள் ______ மலைக்கு முதன்மை கொடுத்துப் பாடினார்.
   அ) இமய ஆ) கொல்லி இ) பொதிகை ஈ) விந்திய
4. 'இளமை' என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ______.
   அ) முதுமை ஆ) புதுமை இ) தனிமை ஈ) இனிமை
5. வறுமையைப் பிணி என்றும், செல்வத்தை ______ என்றும் கூறுவர்.
   அ) மருந்து ஆ) மருத்துவர் இ) மருத்துவமனை ஈ) மாத்திரை

ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக : 5 x 1 = 5

6. வயலில் விளைந்து முற்றிய நெற்பயிர்களை ______ செய்வர்.
7. திருநெல்வேலி ______ ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.
8. உலகம் உண்ண உண்; உடுத்த உடுப்பாய் என்று கூறியவர் ______.
9. ______ ஒரு நாட்டின் அரணன்று.
10. 'இன்சொல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.

இ) பொருத்துக : 5 x 1 = 5

11. கொற்கை - அறுத்தல்
12. விதை - முத்துக்குளித்தல்
13. கதிர் - நடுதல்
14. நாற்று - விளக்கு
15. ஞானம் - கதை

ஈ) ஓரிரு சொற்களில் விடையளி : (ஏதேனும் ஐந்து மட்டும்) 5 x 2 = 10

16. பள்ளி மகளிரின் பெயர்களை எழுதுக.
17. உழவர்கள் எப்போது நண்டுபிடித்தனர்?
18. தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?
19. பொய்கையாழ்வாரும், பூதத்தாழ்வாரும் அகல் விளக்காக எவற்றை உருவகப்படுத்துகின்றனர்?

20. பெரியாழ்வார் எதற்காக பாமாலை சூட்டுகிறார்?
21. அறக்கதிர் விளைய எதனை எருவாக இட வேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார்?
22. பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?
23. ஒரு நாட்டுக்கு எவையெல்லாம் அரண்களாக அமையும்?

உ) ஓரிரு தொடர்களில் விடை தருக: (ஏதேனும் மூன்று மட்டும்) **3 x 3 = 9**

25. திருநெல்வேலிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.
26. உவமை அணிக்கும், எடுத்துக்காட்டு உவமை அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?
27. இளம் வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை?
28. ஊருணியையும், மரத்தையும் எடுத்துக்காட்டி குன்றக்குடி அடிகளார் கூறும் செய்திகள் யாவை?
28. சிறந்த நாட்டின் இயல்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை?

ஊ) அடி மாறாமல் எழுதுக : **4 + 2 = 6**

29. 'மாரியொன்று' எனத் தொடங்கும் விருந்தோம்பல் பாடலை அடி மாறாமல் எழுதுக.
30. 'பிறப்பொக்கும்' எனத் தொடங்கும் குறட்பாவை அடி மாறாமல் எழுதுக.

எ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி: **5 x 1 = 5**

31. தொடருக்குப் பொருத்தமான உவமையை எடுத்து எழுதுக.

    என் தாயார் என்னை ________ காத்து வளர்த்தார்.

    (கண்ணை இமை காப்பது போல / தாயைக் கண்ட சேயைப் போல)
32. கலைச்சொல் அறிவோம் :

    Cultivation
33. எதிர்ச்சொல் தருக :

    அ) எளிது x

    ஆ) இரவலர் x
34. சரியான வினாச் சொல்லை இட்டு நிரப்புக :

    நெல்லையப்பர் கோவில் ________ உள்ளது?

ஏ) கடிதம் / கட்டுரை எழுதுக : **1 x 5 = 5**

என்னை கவர்ந்த நூல்

(அல்லது)

ஒற்றுமையே உயர்வு

*****

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

## ஆறாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம்: 1.30 | மதிப்பெண்கள்: 50

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **5 x 1 = 5**

1. தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் குறிப்பிடும் நூல்
   அ) திருவாசகம் ஆ) திருக்குறள் இ) திரிகடுகம் ஈ) திருப்பாவை
2. காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர்
   அ) கோவை ஆ) மதுரை இ) தஞ்சாவூர் ஈ) சிதம்பரம்
3. 'சோம்பல்' என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல்
   அ) அழிவு ஆ) துன்பம் இ) சுறுசுறுப்பு ஈ) சோகம்
4. வாழ்வில் உயர கடினமாக ______ வேண்டும்.
   அ) பேச ஆ) சிரிக்க இ) நடக்க ஈ) உழைக்க
5. மணிமேகலா தெய்வம் மணிமேகலையை அழைத்துச் சென்ற தீவு
   அ) இலங்கைத் தீவு ஆ) இலட்சத்தீவு
   இ) மணிபல்லவத் தீவு ஈ) மாலத்தீவு

ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக : **4 x 1 = 4**

6. காந்தியடிகள் ______ அடி நிழலில் தமிழ் கற்க வேண்டும் என்று விரும்பினார்.
7. ஏழைகளுக்கு உதவி செய்வதே ______ ஆகும்.
8. உள்ளத்தில் ______ இல்லாமல் இருப்பது சிறந்த அறமாகும்.
9. தம் + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ______.

இ) பொருத்துக : **4 x 1 = 4**

10. இலக்கிய மாநாடு - பாரதியார்
11. தமிழ் நாட்டுக் கவிஞர் - சென்னை
12. குற்றாலம் - ஜி.யு.போப்
13. தமிழ்க் கையேடு - அருவி

ஈ) ஓரிரு சொற்களில் விடையளி: (ஏதேனும் 5க்கு மட்டும்) **5 x 2 = 10**

14. தாராபாரதியின் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
15. காந்தியடிகள் மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் முதலில் ஏன் நுழையவில்லை?
16. சொல் என்றால் என்ன?
17. யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும்?
18. உழைக்கும் போது என்னவாக ஆகிறோம்?
19. அமுதசுரபியின் சிறப்பு யாது?
20. அறிவின் பயன் யாது?
21. பெயர்ச் சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

உ) ஓரிரு தொடர்களில் விடை தருக: (ஏதேனும் 3க்கு மட்டும்) 3 x 4 = 12

22. சொற்களின் வகைகளை எழுதுக.
23. இன்பநிலை எப்போது வந்து சேரும்?
24. பழம், வேர் ஆகியவற்றின் இயல்புகள் யாவை?
25. மணிமேகலை மன்னரிடம் வேண்டியது யாது?
26. ஈகை பற்றிய வள்ளுவரின் கருத்து யாது?

ஊ) அடி மாறாமல் எழுதுக : 4 + 2 = 6

27. புல்வெளி எனத் தொடங்கும் பாடல் .............. ............... கலைக்கூடம் என முடியும் பாடலை எழுதுக.
28. இன்னா ............. எனத் தொடங்கி விடல்................ என முடியும் திருக்குறளை எழுதுக.

3 x 1 = 3

29. கலைச்சொல் அறிவோம் :
    நாட்டுப்பற்று
30. சொற்றொடரில் அமைத்து எழுதுக :
    ஆலோசனை
31. பொருள்தருக
    பணி -
    கூர் -

ஏ) பின்வரும் தலைப்பில் கட்டுரை எழுதுக : 1 x 6 = 6

32. தேசிய ஒருமைப்பாடு என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

3. அறம் செய விரும்பு என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

******

# மூன்றாம் இடைப்பருவப் பொதுத்தேர்வு - 2023

எட்டாம் வகுப்பு பதிவு எண் :

## தமிழ்

நேரம்: 1.30 மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5 x 1 = 5

1. அடுத்தவர் வாழ்வைக் கண்டு _______ கொள்ளக்கூடாது.

அ) உவகை ஆ) நிறை இ) அழுக்காறு ஈ) இன்பம்

2. நாம் நீக்க வேண்டியவற்றுள் ஒன்று _______.

அ) பொச்சாப்பு ஆ) துணிவு இ) மானம் ஈ) எளிமை

3. கவலைகள் _______ அல்ல.

அ) சுமைகள் ஆ) சுவைகள் இ) துன்பங்கள் ஈ) கைக்குழந்தைகள்

4. பூனா ஒப்பந்தம் _______ மாற்ற ஏற்படுத்தப்பட்டது.

அ) சொத்துரிமையை ஆ) பேச்சுரிமையை

இ) எழுத்துரிமையை ஈ) இரட்டை வாக்குரிமையை

5. ஒரே செய்யுளை இரு பொருள் படும்படி பாடுவது _______ அணி.

அ) பிறிதுமொழிதல் ஆ) இரட்டுறமொழிதல்

இ) இயல்பு நவிற்சி ஈ) உயர்வு நவிற்சி

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக:** 3 x 1 = 3

6. உன்னுடன் நீயே _______ கொள்.

7. பொருளாதாரப் படிப்பிற்காக அம்பேத்கர் _______ சென்றார்.

8. இரட்டுறமொழிதல் அணியின் வேறு பெயர் _______

**III. பொருத்துக:** 5 x 1 = 5

| | | | |
|---|---|---|---|
| 9. | நிறை | - | ஒரு சொல் அல்லது தொடர் இரு பொருள் தருவது |
| 10. | பொறை | - | கொள்கை |
| 11. | இரட்டுறமொழிதல் | - | விருப்பம் |
| 12. | மதம் | - | மேன்மை |
| 13. | மையல் | - | பொறுமை |

**IV. மொழியோடு விளையாடு :**

14. கலைச்சொல் எழுதுக : 2 x 1 = 2

* Doctorate
* Agreement

15. இரு வினாக்களுக்கு ஒரு விடை தருக : 2 x 1 = 2

* கதிரவன் மறையும் நேரம் எது? கழுத்தில் அழகாய்ச் சூடுவது எது?
* குழம்பும் கூட்டும் மணப்பது ஏன்? குருதி மிகுதியாய்க் கொட்டுவது ஏன்?

16. பொருத்தமான சொற்களால் நிரப்புக : 1 x 1 = 1

மாடுகள் ________ (தமது / தனது) தலையை ஆட்டின.

V. அடிபிறழாமல் எழுதுக : 5 x 1 = 5

17. ஓடிவந்து ............... பாதையாகிறது

VI. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. 5 x 2 = 10

18. மனிதர்களின் பொது இயல்பாகக் கன்னிப்பாவை நூல் கூறுவது யாது?

19. தோல்வி எப்போது தூண்டுகோலாகும்?

20. அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக்கொண்டார்?

21. வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளும் முன் அம்பேத்கர் கூறியது யாது?

22. வேற்றுமை அணி என்றால் என்ன?

23. கவலைகளைக் கவிஞர் எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?

24. அம்பேத்கரின் பொன்மொழிகளை எழுதுக.

VII. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி : 2 x 3 = 6

25. பூமி எப்போது பாதையாகும்?

26. இந்திய அரசியல் அமைப்பு சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை?

27. பிறிதுமொழிதல் அணியை விளக்கி எடுத்துக்காட்டுத் தருக.

VIII. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி : 1 x 5 = 5

28. வாழ்வில் உயர நம்பிக்கையைப் போன்று வேறு என்னென்ன பண்புகள் தேவை என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

(அல்லது)

பூனா ஒப்பந்தம் பற்றி எழுதுக.

IX. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி : 1 x 6 = 6

29. உழைப்பே உயர்வு கட்டுரை எழுதுக.

(அல்லது)

குழந்தை கிருஷ்ணாவின் பண்பு நலன்களைப் பற்றித் தொகுத்து எழுதுக.

******

www.Padasalai.Net